# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 28 செவ்வாய்க்கிழமை (11-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 104


## 'வை-12' ரக விமானம் அழிந்தது எப்படி?

### படை வட்டாரங்களில் கேள்வி

கொழும்பு, மார்ச் 11

சீனக்குடா விமானத்தள ஓடுபாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'வை - 12' ரக எவ்வாறு தாக்கி அழிக்கப்பட்டது என்பது தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்களில் பலவிதமான கேள்விகள் எழுந்துள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு விடுதலைப் புலிகள் இந்தத் தளத்துக்குள் ஊடுருவி விமானத்தை அழித்தது தெரிந்ததே.

மோட்டார் குண்டு வீழ்ந்து வெடித்ததால் விமானம் அழிந்ததா? ஆர். பி. ஜி. தாக்குதலில் அழிக்கப்பட்டதா? தற்கொலைப்படையினரின் தாக்குதலுக்கு அழிந்ததா? — இந்தக் கேள்விகளுக்கு இன்னமும் தெளிவான பதில் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-150)

### குடாக்கடல் ஊடாக வெள்ளைக் கொடிகளுடன்

## பூநகரியில் இருந்து 205 பேர் வள்ளங்களில் யாழ். வந்தனர்

குருநகர், மார்ச் 11

'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின்போது குருநகர்ப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, பூநகரிக்கு சற்று தெற்கே குடாக்கடலை அண்டியுள்ள பாலாவிப் பகுதியில் வசித்து வந்த 205 பேர் நேற்று தமது வள்ளங்கள் மூலம் குடாக்கடலின் ஊடாக குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

பெண்கள், குழந்தைகள் உட்பட 205 பேர் 18 வள்ளங்களிலும் இரண்டு பிளாஸ்டிக் படகுகளிலும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டவாறு நேற்றுக் காலை 7 மணியளவில் குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிக்கு 38 நாள்களாக உணவு விநியோகம் இல்லை

### கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 11

நெல்லியடி யார்க்கரு ஆலயத்திற்கு அண்மையில், கடந்த சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இடம்பெற்ற கிரனேற் வீச்சுச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும், மற்றொரு சிப்பாயும் பொது மக்களில் ஒருவரும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாலை வேளை ஆலய

(8ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணமின்றி 3லட்சம்பேர்பட்டினி

வவுனியா, மார்ச் 11

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களையும் மற்றும் வவுனியா மாவட்டத்தின் வடக்குப் பிரதேசத்தையும் உள்ளடக்கிய வன்னிப்பகுதிக்கு கடந்த 38 நாள்களாக வவுனியாவிலிருந்து உணவுப் பொருள்கள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் நிவாரண உணவு பெற்று வந்த சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நிவாரண விநியோகம் தடைப்பட்டதால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 74 ஆயிரத்து 886 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 98 ஆயிரத்து 569 பேர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மிக மோசமான பாதிப்பு கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஏற்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட 49 ஆயிரத்து 38 குடும்பங்கள் நிவாரண உதவி பெற்றே வாழ்க்கை நடத்தி வந்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தீர்வுக்கான அலகு குறித்து

## மு. காங்கிரஸுடன் கூட்டணி இணக்கம்!

கொழும்பு, மார்ச் 11

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அலகு தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் இணக்கநிலை ஒன்று ஏற்பட்டுள்ளதாக 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் ஐ. தே. கட்சியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது மேற்படி இருகட்சிகளினதும் பிரமுகர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் உள்ள தளங்களில் விமானங்கள் இரவில் தரிக்க தடை!

கொழும்பு, மார்ச் 11

போர் நடவடிக்கையில் ஈடுபடும் விமானங்கள் மற்றும் ஹெலிகளை இரவு நேரங்களில் வடக்கு — கிழக்குக்கு வெளியே உள்ள விமானத் தளங்களிலேயே தரித்து வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

வவுனியா விமானத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் ஆட்டிலறித் தாக்குதல் நடத்திய பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாகத் தற்போது தெரியவருகிறது.

வவுனியா விமானப்படைத் தளம் மீது ஆட்டிலறித் தாக்குதல் நடத்தும் திறன் விடுதலைப் புலிகளுக்கு இருப்பதாகத் தெரிய வந்ததையடுத்து, நிரந்தரமாக வடக்கு — கிழக்கிலுள்ள படை முகாம்களில் இரவு நேரத்தில் விமானங்கள் தரிக்கக் கூடாது என்ற நிர்ப்பந்தம் படையினருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரே கிழக்கில் சீனக்குடா விமானத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'வை – 12' ரக விமானத்தைப் புலிகள் விமானத் தளத்தினுள் ஊடுருவித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் ஐக்கிய முன்னணியின்

## பெண் வேட்பாளரை மயக்கி கடத்திய கோஷ்டி

கொழும்பு, மார்ச் 11

மஹரகம பிரதேசசபைக்கு மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் திருமதி ஹர்ஷினிடி வாசனா விதான கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்டார்.

திருமதி விதானவின் வீட்டுக்கு வந்த ஒரு குழுவினர் அவரது தந்தையும் சகோதரியும் விபத்தில் சிக்கியுள்ளதாக முதலில் தெரிவித்தனர். பின்னர் அவர்கள் ஏதோ விதத்தில் திருமதி விதானவை மயக்கமடையச் செய்து வாகனத்தில் கடத்திச் சென்றுள்ளனர். வாகனத்தில் சென்று கொண்டிருந்த வேளை மயக்கம் தெளிந்து எழுந்த அவர் கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பி மாத்தளைப் பொலீசில் சரணடைந்தார்.

திருமதி விதானவின் கடத்தலுக்குப் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருப்பதாலோ என்னவோ பொலீசார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இது

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப தேர்தல் சாகசங்களிலை உது பிந்திய சாதனை எண்டு சொல்லுங்கோ......!

### தேர்தல் வன்செயல்களை ஆட்சேபித்து

## இரு பிரதான அரசியல் கட்சிகளின் தலைமையகங்கள் முன்பாகமறியல்

கொழும்பு மார்ச் 11

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வன்முறைகள் அதிகரித்து வருவதை அடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான இரு கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியனவற்றின் தலைமைப் பணிமனைகளுக்கு முன்பாக நாளை மறுதினம் வியாழனன்று மறியல் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்த அமைதி மறியல் போராட்டத்தின் முடிவில் இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர்களிடமும் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக தேர்தல் வன்முறைகள் தொடர்பான அவதானிப்பு அமைப்பின் பிரதிநிதி பி. சரவணமுத்து தெரிவித்தார்.

இதே வேளை — உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுக்கள் தாக்கல்

(8ஆம் பக்கம் பார்க்க)

### 130 பேர் பலியான படகு விபத்து:

## 8 இந்திய மீனவர் மீது வழக்குத் தொடர முயற்சி

கொழும்பு, மார்ச்11

அண்மையில் நாச்சிக்குடா கடற் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எட்டு இந்திய மீனவர்கள் மீதும் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யத் தமக்கு ஆதாரங்கள் கிடைத்திருப்ப

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

A/L Students appearing for the examination in 1997 for their second shy, are required to meet the Rector at 9.00 a.m. on 12-03-1997.

**RECTOR.**

(C-274)



## மனமார வாழ்த்துகின்றோம்

**யாழ்ப்பாணம்**
**ப.நோ.கூ. சங்கத்தின்**
**கூட்டுறவுச் சேவையில்**
**25 வருடங்களை**
**நிறைவுசெய்து இன்று விழாக்காணும்**

1. திரு. செ. தனபாலசிங்கம்
2. திரு. தி. செல்லத்துரை
3. திரு. செ. சிவராஜா
4. திரு. சி. செல்வராஜா
5. திருமதி சா. தேவராஜா
6. திரு. பி. திருஞானசம்பந்தர்
7. திரு. பெ. பாலசுப்பிரமணியம்
8. திரு. மி. கிளறன்ஸ்
9. திரு. இ. பத்மநாதன்
10. திருமதி க. மகேந்திரன்
11. திரு. நெ. ஜே. குணராஜா
12. திரு. சி. சிவலோகநாதன்
13. திரு. த. சிவபாதசுந்தரன்
14. திருமதி பு. நவரட்ணம்
15. திரு. சி. அன்னராஜா
16. திரு. சி. பாலேந்திரநாதன்
17. திரு. சி. பத்மநாதன்
18. திரு. இ. முருகானந்தன்
19. திரு. வே. நடராஜா

ஆகியோரின் தன்னலமற்ற சேவை எமது சங்கத்தில் மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,**
**யாழ். பட்டணக் கிளை.**

(45729)



## கண்ணீர் அஞ்சலி

**சுப்பையாக் குருக்கள்**
**வேதாரணியக் குருக்கள்**
**(பிரதமகுரு, வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோயில்)**

10 - 03 - 97 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது ஆலய பிரதம குருவாகிய சிவஸ்ரீ சு. வேதாரணியக் குருக்கள் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய வல்வெட்டி வேவில் வீரகத்திப் பிள்ளையாரை இறைஞ்சுகின்றோம்.

**ஆலய ஆதீனகர்த்தா,**
**தி. விக்னேஸ்வரன் ஐயா.**

(45732)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி வைத்திலிங்கம் புஷ்பராணி**
அவர்களின் அருமைத் தாயார்
**திருமதி வைத்திலிங்கம் செல்லம்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.**
மல்லாகம். (45726)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி வை. விமலராணி**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி வைத்திலிங்கம் செல்லம்**

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் ம. வி.**

(45727)


## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கார் — சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சைக்கிளை ஓட்டிச் சென்றவரும், பத்தமேனியைச் சேர்ந்தவருமான தம்பு காசிப்பிள்ளை (வயது 65) என்பவரே காயமடைந்தவராவர். இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## நுகர்வோர் பாதுகாப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மார்ச் 11

சர்வதேச நுகர்வோர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

'நுகர்வோர் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் பொருளியல்துறைத் தலைவர் திரு. வி. பி. சிவநாதன் கருத்துரை வழங்குவார்.

(ஐ)

## மர்மப் பொருள் வெடித்ததால் மரணம்

கடலில் இருந்து கரை ஒதுங்கிய மர்மப் பொருள் ஒன்றை எடுத்து பரிசோதிக்க முற்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் அது வெடித்ததனால் உடல் சிதறிப் பலியானார்.

வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் கடந்த 5 ஆம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சூசைப்பிள்ளை ரஞ்சன் (வயது 30)என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

(ஐ-36)

## 14 இலங்கையர் கைது

கொழும்பு, மார்ச் 11

சீனா வழியாக ஜப்பானிற்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 14 இலங்கையர்களைச் சீன அதிகாரிகள் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களை விடுதலை செய்யமுடியாது என்று தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவர் கூறியுள்ளார்.

கடவுச்சீட்டில் மோசடி செய்து முகவர் ஒருவர் மூலம் இவர்கள் சீனாவுக்குச் சென்றுள்ளனர். சீனாவிலிருந்து ஹொங்கொங் வழியாக யப்பானிற்குச் செல்ல இவர்கள் எத்தனித்த சமயம் கைதாகினர்.

(ஐ-5)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

## விவசாயபீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட அனைத்து வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 17 - 03 - 1997 (திங்கட்கிழமை) அன்று ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளன. மாணவர்கள் அனைவரும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பதிவாளர்.**
யாழ். பல்கலைக்கழகம்.
1997 - 03 - 10
(C/276)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை துரைரத்தினம் (கார் துரை)

சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை துரைரத்தினம் (பிரபல கார் வர்த்தகரும் புரோக்கரும்) அவர்கள் 3 - 3 - 97 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இரத்தினம்மாவின் பாசமிகு மூத்த மகனும், பரமேஸ்வரியின் முன்னாள் கணவரும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ரூபன், கல்பனா, துவாரகா, துஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மங்கையர்க்கரசி, சுந்தரலிங்கம், இராசரத்தினம் (லிங்கம் ஸ்ரோஸ், சங்கானை), பாலசிங்கம், (இலங்கை வங்கி, மானிப்பாய்), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைரவநாதன் (ஓய்வு பெ ற புகையிரத ஊழியர்), சிவகுமாரன் (சாறி கவுஸ் கொழும்பு), பத்மாதேவி, கமலாதேவி, விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், முரளி (கனடா), ரமணன் (கனடா), வசந்தன் (கனடா), விபுலன், தர்ஷினி, பிரதீபன், மயூரன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமாவும், சுகிர்தினி, சுசீபன், சுதர்சன், சுமணன், நிரோசன் (கனடா), பிரகாஷ், பாமினி, திருமதி ஹேமந்தினி முரளி, திருமதி சுங்காநிதி, ரமணன் (கனடா), தவராசா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05 - 03 - 97 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொ. பாலசிங்கம் (பாலா)**
(சகோதரர்)
[இலங்கை வங்கி மானிப்பாய்]

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை. (9370)

## தில்லையம்பலம் யசோதரன்

அளவெட்டி கும்பிழாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட தில்லையம்பலம் யசோதரன் 28-02-97 இல் அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம், சுகிர்தம் ஆகியோரின் அன்பு மகனும், புஸ்பா (கனடா), காண்டீபன், யசோதா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**தி. சுகிர்தம்** (தாயார்)

பொன்னம்பலம் வீதி,
மானிப்பாய்.
(இலங்கை பெந்தகோஸ்த சபைக்கு அருகில்.) (9369)

## சபாபதிப்பிள்ளை அப்புத்துரை

மாதகல், நாவலர் வீதியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை அப்புத்துரை அவர்கள் 26-02-97 இல் வவுனியாவில் காலமானார்,

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், தவேஸ்வரி (புளியங்குளம்), கிருஷ்ணகுமார் (இராசன் -ஜேர்மனி), நகுலேஸ்வரி (வவுனியா), இரவீந்திரகுமார் (புளியங்குளம்), விஜயகுமார் (புளியங்குளம்), ஜெயவிக்கினேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-03-97 அன்று வவுனியா, தோணிக்கல், சிவன் கோயில் வீதியில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. சிவபாலசுப்பிரமணியம்**
(மருமகன்)

நாவலர் வீதி,
மாதகல். (C/275)

## திருமதி தர்மலிங்கம் சின்னத்தங்கம்

பலாலி கிழக்கு வயாவிளானைப் பிறப்பிடமாகவும், பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சின்னத்தங்கம் 10 - 03 - 97 இல் காலமானார்.

அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், இராசரத்தினம், செல்லம், சின்னையா (ஆசிரியர் வவுனியா), இராசம்மா (வவுனியா), நவரத்தினம், நாகராசா (சுவிஸ்), சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்லத்துரை, சரஸ்வதி, பொன்னம்பலம் (வவுனியா), செல்வராணி (வவுனியா), கமலாதேவி, மோகனகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11 - 3 - 97 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
**நவரத்தினம்** (மகன்)

பத்தமேனி,
அச்சுவேலி. (45728)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பலஸ்தீனியர் இணங்க மறுத்தால் படை வாபஸ் இடம்பெறமாட்டாது!

## இஸ்ரேலிய அதிகாரி எச்சரிக்கை

ஜெருஸலேம், மார்ச் 11

தற்போதைய சூழ் நிலையில் பலஸ்தீனம் ஒத்துழைக்க மறுத்தால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி மேற்குக் கரையில் 9 சதவீத பிரதேசத்தில் இருந்து படைகளை வாபஸ் பெறப் போவதில்லை என்று இஸ்ரேல் அரசு எச்சரித்துள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு மூன்று நாள் பயணமாக ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். இவ்வேளையில் இஸ்ரேலிய அரச உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்,

கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் இஸ்ரேலின் திட்டத்தினால் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் பெரும் அச்சுறுத்தலை எதிர் நேக்கியுள்ளது.

இந்த விவகாரத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவாக நடந்து கொண்டதற்காக அமெரிக்காவை பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் கண்டித்துள்ளார். (ஐ-10)

★ மற்றொரு அறிவியல் சாதனை

## இலத்திரனியல் நீதிமன்றம் சிங்கப்பூரில் அறிமுகம்!

சிங்கப்பூர், மார்ச் 11

கணனித் தகவல், கணனிவலை (இன்ரர்நெற்) ஆகிய இலத்திரனியல் தொழில் நுட்பங்கள் சிங்கப்பூரின் நீதிமன்ற அமைப்பில் விரைவில் பெரும் புரட்சியை ஏற்படுத்தவுள்ளன.

ஒரு கணனியும், ஒரு கணனி வலையும் இணைந்த இலத்திரனியல் நீதிமன்றம் எதிர்வரும் 2000 ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூரில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வழக்குத் தாக்கல் செய்யவும் வழக்காடவும் நீதி மன்றங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை, வழக்கறிஞரின் அலுவலகத்தில் இருந்து கொண்டே மேற்படி இலத்திரனியல் கருவிகள் மூலம் அவற்றை வழங்கி விவாதித்து நீதி பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த இலத்திரனியல் நீதிமன்றத்தை சிங்கப்பூரின் உயர் நீதிமன்ற நீதிபதி கடந்த ஞாயிறன்று அறிமுகம் செய்துவைத்தார்.

தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ள சிங்கப்பூரின் மதிப்பு இதனால் உலக அரங்கில் மேலும் ஒருபடி உயர்ந்துள்ளது. (ஐ-10)

# ஹொங்கொங்கில் நாளை பட்ஜெட்

## செலவுக்கு மேலதிகமாக வரவு

ஹொங்கொங், மார்ச் 11

உலக நாடுகளில் வரவு செலவுத் திட்டங்களில் பொதுவாகப் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகளே சமர்ப்பிக்கப்படுவது வழக்கம். ஆனால் ஹொங்கொங் நாட்டைப் பொறுத்தவரை செலவை விட வரவுகள் ஏராளம். மிச்சமிருக்கும் பெரும் நிதி எவ்வளவு என அறியவே அங்கு மக்கள் பரபரப்பாக உள்ளனர்.

சேமித்துவைக்கும் அந்தப் பெருநிதியை எவ்வாறு வரப்போகும் அரசு செலவு செய்யப்போகிறது என்பது குறித்து அறிய ஹொங்கொங் மக்கள் ஆவலாக உள்ளனர். நாளை ஹொங்கொங் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதி ஹொங்கொங் நிர்வாகம் பிரிட்டனிடமிருந்து சீனாவுக்கு கைமாறவுள்ளது. ஹொங்கொங் அரசின் பெருமளவிலான மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைக் கைவிடுமாறு சீனா ஹொங்கொங் அரசுக்கு அழுத்தம் கொடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# யானைத் தந்த விற்பனைக்கு ஐவரிகோஸ்ற் நாட்டில் தடை

அபிற்ஜன், மார்ச் 11

யானைத் தந்தங்களை விற்பனை செய்வதை ஐவரிகோஸ்ற் அரசு தடை செய்திருக்கிறது.

தற்போது நாட்டில் உள்ள யானைத் தந்தங்களின் தொகையை கணிப்பிடுமாறு — அவற்றை நாட்டுக்குள்ளேயும், வெளியேயும் எடுத்துச் செல்வதைக் கட்டுப் படுத்துமாறு அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

யானைத் தந்தங்களை விற்பனை செய்வதற்கு எதிரான சர்வதேச ஒப்பந்தம் ஒன்றில் ஆபிரிக்க நாடுகள் பல ஒப்பமிட்டுள்ளன. ஆனால் ஆபிரிக்காவின் யானை என்று தன்னைத்தானே கூறிக்கொள்ளும் ஐவரிகோஸ்ற் நாட்டில் யானைத் தந்தத்தில் செய்யப்பட்ட காலணிகள் விற்பனை தற்போதும் அமோகமாக நடக்கிறது.

எனினும் யானைத்தந்த வியாபாரம் இந் நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவிய அதேசமயம் அங்குள்ள யானைகளின் எண்ணிக்கையை சில நூறுகளாகக் குறைத்தும்விட்டன. (ஐ)

உலக அரங்கில்

# முன்கூட்டியே தேர்தலை நடத்த அல்பேனிய அதிபர் முன்வந்தார்

## எதிர்க்கட்சிகளுடன் அவர் இணக்கம்

உரிய காலத்துக்கு முன்னராகவே தேர்தலை நடத்த அல்பேனிய ஜனாதிபதி சாலி பொரிஷா முன்வந்துள்ளார். இது தொடர்பாக அவர் எதிர்க்கட்சிகளுடன் இணக்கம் ஏற்படுத்தியுள்ளார்.

அதிபர் சாலி பொரிஷாவின் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகளின் ஒட்டுமொத்த ஆதரவு கிடைத்தும் கூட நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியவில்லை.

பொரிஷாவின் அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்த 48 மணித்தியால போர் நிறுத்தத்தை கிளர்ச்சியாளர்கள் நிராகரித்துள்ளனர். இருப்பினும் போர் நிறுத்தத்தை பொரிஷா அரசு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மோசடி நிதி நிறுவனங்களில் பணத்தை சேமித்து வைத்திருந்த மக்கள் அந்த நிதி நிறுவனங்கள் முறிந்ததைத் தொடர்ந்து தங்கள் சேமிப்பை இழந்தனர்.

இந்த நிதி நிறுவனங்களுக்கு அரசு ஆதரவளித்து வருகிறது என்பதை அறிந்து கொண்ட மக்கள் கடந்த ஜனவரி மாதம் முதல் அரசை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர். ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்று அவர்கள் கோரிவருகின்றனர்.

இதற்கிடையில் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே காணப்பட்ட இணக்கத்தின்படி முன்கூட்டியே தேர்தலை நடத்துதல், தேசிய அரசாங்கத்தை அமைத்தல் ஆகிய யோசனைகளை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

தெற்கு அல்பேனியாவில் கடந்த இரு நாள்களாக இடம்பெற்ற வன்முறைகள் தற்போது ஓய்ந்துள்ளன.

இவ்வாண்டு ஜூன் மாதத்திற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## இடைக்காலத் தலைவராக தங்கபாலு

இந்திய காங்கிரஸின் தமிழ் நாடு மாநிலப் பிரிவிற்கு இடைக்கால தலைவராக கே.வி தங்கபாலு நியமிக்கப்பட்டுள்ளார்.

தங்கபாலுவை காங்கிரஸ் தமிழ்நாடு பிரிவின் இடைக்காலத் தலைவராக நியமித்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கட்சியின் தலைமையை இரா. அன்பரசு கேட்டுள்ளார்.

இதேவேளை தங்கபாலுவின் தலைமையின் கீழ் தான் பணியாற்ற இயலாது என இடைக் காலக் குழுவில் நியமனம் பெற்றுள்ள வாழப்பாடி இராம மூர்த்தி கட்சித் தலைவர் சீதாராம் கேசரிக்கு தந்தி அனுப்பியுள்ளார்.

## துப்பாக்கிகள் ஏந்திய மக்கள் வீதிகள் எங்கும் நடமாட்டம்

கிளர்ச்சியாளர் வசம் இழ்ந்துவிட்ட தெற்கு அல்பேனியாவின் ஜிரோகாஸ்ரர் நகர மக்கள் தமக்குத் தலைமை வகிப்பதற்கென முன்னாள் இராணுவ மேஜர் ஒருவரைத் தெரிவுசெய்துள்ளனர்.

தலைமைத்துவம் இல்லாததால் அங்கு எழுந்த ஸ்தம்பித நிலையை அடுத்தே மக்கள் இத்தெரிவை மேற்கொண்டனர்.

தப்பியோடிய அல்பேனிடக் படையினர் கைவிட்டுச் சென்ற துப்பாக்கிகளைப் பரீட்சித்துப் பார்ப்பதில் மக்கள் ஈடுபட்டதால் நகரில் பரவலாக வேட்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. சகலரும் கைகளில் துப்பாக்கிகளை ஏந்தியவர்களாகவே காணப்படுகின்றனர்.

10 வயதுச் சிறுவர்கள்கூட ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்

# 5 விமானங்கள், 5 முகாம்களை இரு மாதகாலத்தில் அரசு இழந்தது!

கொழும்பு, மார்ச் 11

கடந்த 67 நாள்களில் 5 விமானங்களை அரசு இழந்துவிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இக்காலத்தில் 5 முகாம்களும் விடுதலைப்புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டன.

10-க்கு மேற்பட்ட 122 எம். எம். கனரக பீரங்கிகளைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர் என்று அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

புலிகளால் கைப்பற்றப்பட்ட பீரங்கிகளுக்கு தேவையான சுமார் 8 ஆயிரம் குண்டுகள் வரையில் அவர்களிடம் இருப்பதாகக் கருதப்படுவதாகவும் மேலும் தெரிவிகப்பட்டது. (ஐ-3-150)

## பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவம் குறித்து அறிவுறுத்தல்

வடமராட்சி, மார்ச் 11

யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்புச்சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் அங்கு விற்பனையாகும் விண்ணப்பம்படிவத்தையே பயன்படுத்த வேண்டும் என மேலதிக மாவட்டப்பதிவாளர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பப்படிவம் தற்போது கொழும்பிலிருந்து அனுப்பப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால் தாங்களே விண்ணப்பப்படிவங்களை அச்சிட்டு விநியோகிப்பதால் அதற்குக் கட்டணம் அறவிட வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது விண்ணப்பித்து ஒரு வாரகாலத்துக்குள் விண்ணப்பதாரிகளுக்கு பிறப்புச் சான்றிதழ் தபால் மூலம் அனுப்பப்படுகிறது. (ஐ-173)

## மரண விசாரணை அதிகாரி இல்லை

நெடுந்தீவு, மாாச் 11

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக நெடுந்தீவைச் சேர்ந்த மரண விசாரணை அதிகாரிகள் இடம்பெயர்ந்து சென்றதை அடுத்து கடந்த ஐந்து வருடங்களாக நெடுந்தீவுப் பகுதிக்கு மரணவிசாரணை அதிகாரி எவரும் நியமிக்கப்படவில்லை. (ஐ-111)

## ஆசிரியருக்கு விழாமுற்பணம் இம்மாதம் கிடைக்குமா?

### சுற்றறிக்கை வரவில்லை

அரச ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இம் மாதம் விழா முற்பணத்தை வழங்குவதற்குரிய சுற்றறிக்கை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வழமையாக இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்படும் விழா முற்பணம் வழங்கப்படுமா என்பது தொடர்பான எதுவித அறிவித்தலும் கல்விக் கோட்டங்களுக்கு கிடைக்கவில்லை.

இதேவேளை வழமையாக பெப்ரவரி மாதம் வழங்கப்படும் விசேட சம்பள முற்பணம் ரூபா ஆயிரம் சுற்றறிக்கை கிடைக்காததனால் சென்ற மாதம் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தூர் மெதடிஸ்த ஆஸ்பத்திரி திருத்த வேலைகள் ஆரம்பம்

புத்தூர் மெதடிஸ்த வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு வசதியாக திருத்தவேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இராணுவ நடவடிக்கையின் [illegible] இவ் வைத்தியசாலையின் கட்டடங்கள், விடுதிகள், சுற்றுமதில்கள், தேவாலயம் என்பன பலத்த சேதத்துக்குள்ளாகியிருந்தன.

இங்குள்ள தேவாலயம் முதலில் திருத்தப்பட்டது. தொடர்ந்து வைத்தியசாலைத் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### உருளைக் கிழங்கை காவல் காக்கும் விவசாயிகள்

உரும்பிராய், மார்ச் 11

உரும்பிராய்ப் பகுதி தோட்டங்களில் நன்கு விளைந்து அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள உருளைக் கிழங்கு இரவோடு இரவாக களவாடப்படும் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் சில விவசாயிகள் ஊரடங்குச் சட்டத்தின் மத்தியில் இரவுவேளை தங்கள் தோட்டத்தில் காவலில் ஈடுபடுகின்றனர்,

(ஐ-154)

### கிறிஸ்து பிறப்பின் 2 ஆயிரம் ஆண்டு நிறைவு

வடமராட்சி, மார்ச் 11

கிறிஸ்து பிறந்து 2ஆயிரம் ஆண்டுகள் பூர்த்தியாவதை ஒட்டிய நிகழ்வுகளைப் பெரிய அளவில் கொண்டாட யாழ். மறை மாவட்ட கத்தோலிக்கத் திருச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது. பங்குகள் ரீதியாக இதற்கென குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஜுபிலி ஆண்டுக்குரிய ஏற்பாடுகள் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

(ஐ-173)

### பல் பொருள் அங்காடி

வடமராட்சி, மார்ச் 11

பருத்தித்துறை ப நோ கூ. சங்கம் பல்பொருள் விற்பனை அங்காடி ஒன்றை நுகர்வோரின் வசதிகருதி பருத்தித்துறை நகரில் திறந்து வைத்துள்ளது.

(ஐ-173)

### தாளையடிக்கு பஸ் சேவை

தென்மராட்சி, மார்ச் 11

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் வடமராட்சி கிழக்கு தாளையடி வரை புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து பி. ப 2.00 மணிக்குப் புறப்படும் பஸ் தாளையடியில் தரித்து மறுநாள் காலை 7. 00 மணிக்குப் புறப்பட்டு பளை சாவகச்சேரியூடாக யாழ்ப்பாணம் சென்றடைகிறது (117)

### சந்தை இடமாற்றம்

அராலி, மார்ச் 11

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்குச் சமீபமாக வீதியோரம் இயங்கி வந்த சந்தை அருகில் உள்ள வளவு ஒன்றுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

நீண்டகாலம் இச்சந்தை வீதியோரம் இயங்கி வந்ததால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு வந்தது. இந்த சந்தையை புதிய இடத்துக்கு மாற்ற பிரதேச சபை விசேட ஆணையாளர் நடவடிக்கை எடுத்தார்.

(ஐ-12)

### சான்றிதழ் வழங்கல்

வடமராட்சி, மார்ச் 11

யாழ். கல்வி வலயம் இரண்டின் முறைசாரக் கல்விப் பிரிவு சான்றிதழ் வழங்கும் வைபவம் வதிரி திருஇருதயக் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறும்.

கரவெட்டி — மருதங்கேணி. கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வி. செல்வராஜா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

(ஐ- 173)

### எரிபொருள் நிலையம் திறப்பு

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வல்வெட்டித்துறை எரிபொருள் விநியோக நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் வைத்து தற்போது மண்எண்ணை வழங்கப்பட்டு வருகிறது.

(ஐ-173)

### பரிசளிப்பும் கௌரவிப்பும்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வித்தியாலய வரலாற்றில் முதல்தடவையாக கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிசிறப்பு (ஏ) சித்தி பெற்ற மாணவன் விழாவில் கௌரவிக்கப்படுவார். (ஐ-173)

### மாணவருக்கு சிகிச்சை முகாம்

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கென இலவச வைத்திய சிகிச்சை முகாம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை சிகிச்சை முகாமில் மாணவர்களுக்கு சிகிச்சை அளித்தார்.

500 -க்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கு சிகிச்சை பெற்றனர். (ஐ-173)

### பிரிவுபசாரம்

திருநெல்வேலி, மார்ச் 11

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் மாகாணப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் வி. சிறிகாந்தாவுக்கு பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை நலன் புரிச் சங்கம் பிரிவு உபசார வைபவம் ஒன்றை கடந்த வாரம் நடத்தியது. புதிய யாழ். சுகாதர சேவை பதில் பிரதி மாகாண பணிப்பாளராக பதவி ஏற்றுள்ள டாக்டர் கே. ரி. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இப் பிரிவுபசார வைபவத்தில் நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திரன், பிராந்திய பல் வைத்திய நிபுணர் செல்வி உமா சிவபாதசுந்தரம், சுகாதார கல்வி அதிகாரி திரு. எம். இராஜேந்திரா, தலைமை எழுதுவினைஞர் திரு. வைரமுத்து ஆகியோர் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர். (ஐ-135)

### கௌரவிப்பு

தென்புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ தினங்கள் கந்தபுராணத் தொடர் விரிவுரை நிகழ்த்திய, தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவத்திரு தியாக. சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அண்மையில் ஆலய தர்மபரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ஐ-173)

### நல்லின கோழிக் குஞ்சுகள்

செம்பியன்பற்று வடக்கு கிராம அலுவலர் தமது பிரிவு மக்களுக்கு நல்லினக் கோழிக் குஞ்சுகளை மலிவு விலையில் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளார். கோழிக் குஞ்சுகளைப் பெற விரும்புவோர் முன்கூட்டியே தம்மிடம் பதிவு செய்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ஐ-173)

---

★ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த

# வவுணதீவு முகாம் எதிர்காலத்திலும் தாக்குதலுக்கு இலக்காகும் ஆபத்து!

கொழும்பு, மார்ச் 11

வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதலுக்கு இலக்காகும் ஆபத்து தொடர்ந்தும் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் தொலைவில் இருந்தவாறே அந்த முகாமைத் தாக்கும் இலக்கைக் கண்டு பிடித்துள்ளனர். எனவே இந்த முகாமைத் தக்க வைப்பது எதிர்காலத்திலும் கடினமானதாகவே இருக்கும்.

கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான வவுணதீவு இராணுவ முகாமை மூடாமல் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டிய அவசியம் இருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு விமான நிலையத்தைப் பாதுகாப்பதற்கும் மற்றும் மட்டக்களப்பு நகரைப் பாதுகாப்பதற்கும் வவுணதீவு முகாம் தொடர்ந்தும் அங்கேயே அமைக்கப்படுவது அவசியமாகும்

மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ள படுவான்கரைப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வவுணதீவு சந்தியில் ஒரு வீதி மட்டக்களப்புக்குச் செல்கிறது. மற்றொரு வீதி விமானத் தளத்துக்குச் செல்கிறது.

வவுணதீவு முகாம் இல்லாது விட்டால் விடுதலைப் புலிகள் விமானப் படைத் தளத்தை மட்டுமல்ல மட்டக்களப்பு நகரில் உள்ள 3 ஆவது படையணி தலைமையகம், செயலகம், இராணுவ புலனாய்வுப் பிரிவு, மாவட்ட ஆஸ்பத்திரி ஆகியவற்றையும் தாக்குவது இலகுவாக இருக்கும்.

இதன் மூலம் மட்டக்களப்பின் பெரும் பகுதி இழக்கப்படலாம்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெல்லாவெளி, புல்லுமலை, பாளையடி வெட்டை, பக்கியெல்ல ஆகிய முகாம்கள் மூடப்பட்டன. அதனால் அவை தாக்குதலுக்கு இலக்காகாமல் தப்பிவிட்டன. ஆனால் வவுணதீவு முகாம் தாக்குதலுக்கு இலக்கானது — இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (ஐ-3-150)

### தவக்காலச் சிந்தனை

(28 ஆம் நாள் செவ்வாய்)

38 வருடங்கள் நோயுற்று குணம் பெற்றவன், "என்னைக் குணமாக்கியவரே படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடக்கச் சொன்னார்" என்றான். யூதர்கள் அவனை நோக்கி "இன்று ஓய்வு நாள். படுக்கையை தூக்கிச் செல்வது முறையன்று" என்றார்கள். இயேசு இதை ஓய்வு நாளில் செய்ததற்காக யூதர்கள் அவருக்கு தொல்லை கொடுக்கத் தொடங்கினர்.

[அரு,5: 1-16]

துன்பப்படும் மனிதனை எதிரிலே கண்ட போதும் துயர் துடைக்கும் கரங்கள், இன்று சட்டப் புத்தகத்தை கையிலெடுத்து உதவிக்கரம் நீட்ட தாமதிப்பதால் பல உயிர்கள் ஊசலாடவே செய்கின்றன. மனிதனுக்காகவே சட்டங்களன்றி, சட்டங்களுக்காக மனித வாழ்க்கை மாறும் போது மனச் சுமைகள் அதிகரிக்கவே செய்கின்றன. உதவும் கரங்களுக்கு ஏற்படும் உபத்திரவத்தை தவிர்க்க முனைவோமா?

யோசப் பாலா

### வைத்திய அதிகாரி நியமனமில்லை

திருநெல்வேலி, மார்ச் 11

யாழ். பாடசாலைகளுக்கான வைத்திய அதிகாரி ஓய்வு பெற்றுவிட்டதை அடுத்து அப்பதவி நீண்ட நாள்களாக வெற்றிடமாக உள்ளது. தற்போது குருநகர் அரசினர் ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி தனது கடமைகளுடன் பாடசாலை வைத்திய அதிகாரியின் கடமையையும் மேலதிகமாகக் கவனித்து வருகிறார். (ஐ135)

### சங்கக் கிளை மீண்டும் திறப்பு

வடமராட்சி, மார்ச் 11

நெல்லியடி— கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கல்வத்தைக் கிளை இருவார கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.

கிளை முகாமையாளர் இட மாற்றப்பட்டதை அடுத்து எழுந்த நிலைவரத்தினால் கிளை மூடப்பட்டிருந்தது.

சங்க நிர்வாகத்துக்கும், பாவனையாளர்களுக்குமிடையே ஏற்பட்ட சுமூகமான தீர்வினையடுத்து முன்னர் கடமையாற்றிய அதே கிளை முகாமையாளர் இக்கிளைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அதன் பின் கிளை திறக்கப்பட்டது.

(ஐ-173)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளியன்று காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வியாழனன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. உற்சவம் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். உற்சவ நாள்களில் தினமும் மாலை 4·15 மணி முதல் 5.15 மணிவரை திரு. எம் சண்முகநாதன் பெரியபுராணம் பற்றி சொற்பொழிவாற்றுவாற்றுவார். (ஐ)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 11

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர்வரும் வெள்ளியன்று இலங்கை வானொலிப் பாடகர் திரு. சி. நவரத்தினத்தின் இன்னிசை இடம் பெறும்.

இந் நிகழ்ச்சிக்கான அறிமுக [illegible] வழங்குவார்.

(ஐ-173)

---

யாழ்ப்பாணம்

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்**

**விசேட பொதுக் கூட்ட**

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் **26 - 03 - 1997** புதன்கிழமை முற்பகல் 11. 00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. சி. குணரெட்ணம் அவர்களது தலைமையில் சங்க மேல்மாடியில் நடைபெறும். பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

கூட்ட நிகழ்ச்சி நிரல் காலக் கிரமத்தில் தெரிவிக்கப்படும்.

சி. குணரெட்ணம்
தலைவர்

ப. கனகலிங்கம்
செயலாளர்

330, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
11-03-97

(45725)

---

**MODERN EDUCATION CENTRE**
**KARAVEDDY**

**97, 98 மீட்டல் வகுப்புகள்**
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பௌதிகவியல் - திரு. குமரன் செவ். பி. ப. 3 மணி

"புலங்கள்"
திரு. சந்திரப்பிரகாசம்
சனி, ஞாயிறு மு. ப. 10.30 மணி

இரசாயனவியல் - திரு. வசீகரன்
திங்., புதன்., வெள். மு. ப. 6-45 மணி

விலங்கியல் - திரு. கெங்காதரன்
செவ். பி. ப. 4-30 மணி

"முளையவியல்"

தூய / பிரயோக கணிதம் திரு. வெக்ரர் வேலாயுதம்
திங், புதன், வியா., மு. ப. 8-30 மணி

(சி-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் அடிப்படை வசதிகள் இன்றி

# 10 மாதங்களாக அவல நிலையில் மக்கள்

## சொல்லொணாத் துயரங்களை விவரிக்கிறார் அரச அதிபர்

கிளிநொச்சி மாவட்டத்தில், அதனைச் சொந்த இடமாகக் கொண்டவர்களும், யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களும் வாழ்கிறார்கள். 'சத்ஜய' ராணுவ நடவடிக்கைகளின் பின்னர் அங்கு வாழும் மக்களின் கஷ்டங்கள் மேலும் பெருகியுள்ளன.

அவர்களது பரிதாபகரமான வாழ்க்கை நிலை குறித்து, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தகவல்கள் வெளியாகிய போதிலும், முழுமையான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் மிகக் குறைவே.

உண்மை நிலையை சொல்வதற்கு அந்த மாவட்ட அரசாங்க அதிபரை விடப் பொருத்தமானவர் யார்?

முக்கிய மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த கிளிநொச்சி அரச அதிபரும் எழுத்தாளருமான திரு. எஸ். தில்லைநடராஜாவை உதயன் செய்தியாளர் பேட்டி கண்டார்.

அப்பேட்டித் தொகுப்பின் முதலாவது பகுதி இது.

கிளிநொச்சி நகரில் 3 மைல் சுற்றாடல் தவிர்ந்த கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் பொது மக்கள் வாழ்கிறார்கள்.

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் பொதுமக்கள் கிளிநொச்சி நகருக்குள் சென்று குடியேறினார்கள் என்று தகவல் எதுவும் இல்லை.

அப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் திருநகர், திருவையாறு பகுதியில் உள்ள தமது வீடு வாசல்களை, தோட்டங்களைப் பார்க்க மட்டும் பொதுமக்கள் சிலர் சென்று வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இவர்களில் சிலர் பாதுகாப்பாக திரும்பி வந்துள்ளனர். அதே நேரம் சிலர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன, இவ்வாறு சென்ற 15பேர் வரை திரும்பி வரவில்லை என்று கூறப்படுகிறது.

இதுதான் இன்றைய கிளிநொச்சி நகரின் நிலை என்று விவரித்தார் கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லை நடராசா.

### உணவு நிலைவரம்

★ கேள்வி:- உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அங்கு தாராளமாக கிடைக்கின்றனவா?

கிளிநொச்சியில் இயங்கும் ப. நோ. கூ. சங்கங்களில் ஓரளவு பொருள்கள் கிடைக்கின்றன. கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட சுமார் 50 ஆயிரம் மக்கள் இச்சங்கங்களில் பொருள்களை வாங்குகிறார்கள்.

''சூரியப் பிரகாசம் - 1'' நடவடிக்கை காரணமாக யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்தவர்களுக்கான இலவச உலர் உணவு, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அனுப்பப்பட்டு வருகிறது. தாமதமாகவாகினும் அவை வந்து சேர்கின்றன. கடந்த இரு மாதங்களாக அந்த விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளவர்கள் யார் தெரியுமா?

1996 ஏப்ரல் மாதம் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற ''சூரியப் பிரகாசம் - II'' நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வந்த 60 ஆயிரம் பேருக்கும் —

1996 ஜூலை மாதம் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற ''உண்மை வெற்றி'' நடவடிக்கையின் போது மாவட்டத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ள 70 ஆயிரம் பேருக்கும் —

இதுவரை எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. இவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்க அரசாங்கம் இன்னும் அனுமதி வழங்கவில்லை.

### சிதறுண்ட குடும்பங்கள்

'சூரியப்பிரகாசம்' இரண்டு நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வந்துள்ள 60 ஆயிரம் பேர் குடும்பங்களாக வசிக்கவில்லை. தாயும் இரு பிள்ளைகளும் ஓரிடத்தில், கணவன் யாழ்ப்பாணத்தில், தாயும், தந்தையும் யாழ்ப்பாணத்திலும் பிள்ளைகள் இங்குமாகப் பல குடும்பங்கள் சிதறுண்டு இருப்பதால் எத்தனை குடும்பங்கள் மாவட்டத்தில் உள்ளன என்பது குறித்துக் கணக்கெடுக்க முடியாதுள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் நிரந்தரமாக வசிக்கும் மக்களும், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் உதவி வருகின்றனர். ஆனால் அந்த உதவிகள் போதாது. சில நேரங்களில் ஒரு நேரச் சாப்பாட்டுடன் அவர்கள் காலத்தை ஓட்டுகிறார்கள். சில சமயங்களில் அதுவும் கூட இல்லாத நிலையிலும் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசியத்தை அரச உயர்மட்டத்துக்கு அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ளேன்.

அதன் காரணமாக ஜனாதிபதியின் செயலாளர், குழு ஒன்றை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நியமித்து ஒரு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறுபணித்தார். ஆனால் அக்குழு இன்று வரை அறிக்கை சமர்ப்பித்ததாக இல்லை.

### ஜனாதிபதியின் பதில்

கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்த விடயத்தை எடுத்துரைத்தேன். இன்னும் தமக்கு அந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களில் சுமார் 8 ஆயிரம் பேர் இன்னமும் மர நிழல்களிலும், வீதி ஓரங்களிலும்தான் வாழ்கிறார்கள்.

நான்கு தடிகள்; அதை சுற்றி சீலை மறைப்பு; இது தான் அவர்களின் வீடு. இன்றும் கூட அடிப்படை வசதிகள் எதுவும் இன்றியே இவர்கள் வாழ்கிறார்கள். பகலில் வெய்யில் வாட்டுகிறது. இரவில் பனி வாட்டுகிறது. இவர்களின் அவலம்தான் மோசமாகவுள்ளது.

**... நான்கு தடிகள்; அவற்றைச் சுற்றிக்கட்டப்படும் சேலை; இவை தான் அந்த மக்களின்வீடுகள். இரவில் கடும் பனியும், பகலில் அகோர வெயிலும் அவர்களை வாட்டும். தெருவில் செல்லும் வாகனங்கள் கிளப்பிவிடும் புளுதியே அவர்களது சுவாசக் காற்று. உயிரைக் குடிக்கும் விஷஜந்துகளே உடனிருந்து கொல்லும் நண்பர்கள்...**

மாவை குகன்

### உயிர் குடிக்கும் ஜந்துக்கள்

வீதியால் செல்லும் வாகனங்களால் எழுப்பப்படும் தூசி தான் அவர்களின் சுவாசித்தலுக்கான காற்று. நுளம்பும், விஷஜந்துக்களும், பூச்சிகளுமே அவர்களுடன் கூட இருந்து கொல்லும் நண்பர்கள், உணவு இன்றி போசாக்கு இல்லாத நிலை அவர்களுக்கு.

போர்ச் சூழ்நிலை தொடர்வதால் நிம்மதியற்ற மனோ நிலையும் பாதிக்கப்பட வாழ்க்கையுடன் தொடர்கிறது.

### புது வித நோய்கள்

இப்படியான சூழ்நிலையில் வாழ்பவர்களுக்கு காரணம் அறிய முடியாத நோய்கள் பல ஏற்படுகின்றன. அந்த நோய் என்ன, அதற்கான தடுப்பு முறை என்ன என்பதைக் கூட அறிய ஆஸ்பத்திரிகளில் வசதியில்லை. அந்த நோயைக் கண்டுபிடிக்க வைத்திய உபகரணங்கள் இல்லை, அத்துடன் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய வைத்தியர்கள் இல்லை. வைத்திய ஆளணியினரே இல்லை.

கடந்த ஆண்டுக்குரிய கோட்டாக்கள் அனைத்தையும் சேர்த்து மொத்தம் ஆறு லோட் மருந்து வகைகள் கடந்த 4 மாதங்களின் பின் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்துள்ளன. எதிர்வரும் ஜூன் மாதம் வரை இந்த மருந்து வகைகள் போதுமானவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

### மருந்து உண்டு டாக்டர் இல்லை

ஆனால் நோய்களை கண்டுபிடித்து உதவும் மருத்துவ ஆளணியினர் போதியளவு இல்லாததால், மருந்து வந்துள்ளபோதும் பொதுமக்களுக்கு போதியளவு சிகிச்சையை அளிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் அவலமான மரணங்கள் ஏற்படுகின்றன.

நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்கு வவுனியாவுக்கு அல்லது கொழும்புக்கு கொண்டு செல்ல அம்புலன்ஸ் வசதியில்லை. வேறு எந்த வித போக்குவரத்து வசதிகளும் இல்லை. அத்துடன் இந்த நோயாளர்களை அழைத்துச் செல்வதற்கு அமுலில் உள்ள சிக்கலான பாதுகாப்பு நடைமுறையும் இதற்கு தடையாக உள்ளது.

### ஆஸ்பத்திரிகளின் அவலநிலை

அக்கராயனிலும், மல்லாவியிலும் இரு வைத்தியசாலைகள் இயங்குகின்றன. அவை போதிய வசதிகள் இல்லாத நிலையில் செயற்படுகின்றன.

பல்வேறு வகை நோய்களால் மாதாந்தம் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இறக்கிறார்கள். 96ஆம் ஆண்டு கடைசி 3 மாதங்களில் அக்கராயன் ஆஸ்பத்திரியில் 96 பேரும், மல்லாவி ஆஸ்பத்திரியில் 122 பேரும் இறந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இதைவிட ஆஸ்பத்திரிகளுக்கு வராமல் இறப்பவர்களின் எண்ணிக்கை புள்ளி விவரத்தில் அடங்காது. கூடுதலான மக்கள் நோய்களுக்கு ஆளாகியே இறக்கிறார்கள்.

மூளை மலேரியா, செப்ரிசீமியா நோய்களாலேயே கூடுதலான மரணங்கள் சம்பவிக்கின்றன.

### அநாதரவான சடலங்கள்

ஆஸ்பத்திரிகளில் இறப்பவர்களால் மற்றுமொரு நெருக்கடியும் உருவாகியுள்ளது

நோயால் பாதிக்கப்பட்டவர்களை உறவினர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கிறார்கள். அவர்கள் இறக்க நேரிட்டால் அது பற்றிய தகவல் கொடுக்கப்பட்டால் சடலத்தைப் பொறுப்பேற்க அவர்கள் வரமாட்டார்கள். உரிமை கோரப்படாத நிலையில் சடலங்கள் பல நாள்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கும். பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யப்படும்.

**... புதுப்புது வகையான நோய்கள் பரவுகின்றன. அவற்றை இனங்காணக் கூடிய மருத்துவ வசதி அறவே கிடையாது. ஏராளமான மரணங்கள் நாளாந்தம் ஆஸ்பத்திரிகளில் நிகழ்கின்றன. சடலங்கள் அநாதரவாக விடப்படுகின்றன. ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று அவற்றை எடுத்துச் செல்லவோ அடக்கம் செய்யவோ வசதியற்ற நிலையில் உறவினர்கள் உள்ளனர்.**

**அண்மையில் ஒரு தொகுதி மருந்து கிடைத்தது. அவற்றை நோயாளிகளுக்கு உரியபடி வழங்க டாக்டர்கள் இல்லை...**

கிட்டிய உறவினர்கள் இறந்தால் அவரது இனத்தவர்கள் சடலத்தை எடுப்பார்கள். சடலத்தை எடுத்துச் சென்று எரிக்கக் கூட வசதி அற்ற நிலையில் இருப்பதாலேயே சடலங்களைப் பலர் உரிமை கோர முன் வருவதில்லை. எனத்தெரிய வந்துள்ளது

★ கேள்வி:- சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படக் காரணம் என்ன?

★ அரச அதிபர்:- போதிய அளவு குளோரின் வந்து சேராத காரணத்தால் கிணறுகளின் நீர் அசுத்தமாகவே உள்ளது. இதனால் சுத்தமான குடிதண்ணீரைப் பெறுவதில் மக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். புதிதாக வெட்டப்பட்ட கிணறுகளைச் சுற்றி கட்டுகளை அமைக்கப் போதிய சிமெந்து கிடைக்காமையும் கிணற்று நீர் அசுத்தமடையக் காரணமாகவுள்ளது.

அத்துடன் இந்த மக்களிடம் போதிய பாத்திரங்கள் இல்லாமையினால் குடிதண்ணீரைச் சேமித்து வைக்க முடியாத நிலையும் உள்ளது.

மலேரியாவைப் பரப்பும் நுளம்பு வகை பெருமளவில் பரவுகின்றன. அவற்றைத் தடுக்கப் போதிய மலத்தியோன் கிடைப்பதும் இல்லை.

சுகாதாரச் சீர்கேட்டுக்கு மற்றொரு காரணம் போதிய மலசல கூடங்கள் அமைக்கப்படாமையாகும்.

தற்காலிக வதிவிடங்களுக்கு அருகில் உள்ள மறைவிடங்களை தமது மலசல கூடங்களாக மக்கள் பாவிப்பதால், அதன் காரணமாகவும் நோய்கள் பரவுகின்றன. குழந்தைகள் நடமாடும் இடங்களில் மலசலம் கழிப்பதும் பெரும் சீர் கேட்டை ஏற்படுத்துகிறது.

### மனோநிலை பாதிப்பு

போதிய போசாக்கான உணவுப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்காததால் நோய்களை எதிர்க்கும் சக்தியை அவர்கள் இழந்துள்ளார்கள்.

அத்துடன் அவ்வப்போது இடம் பெறும் போர் நடவடிக்கையால் ஏற்படும் பதற்றம் அவர்களது மனோ நிலையையும், உடல் நலத்தையும் பெருமளவில் பாதித்துள்ளது. அதுவும் அவர்கள் நோய் வாய்ப்பட ஒரு காரணமாக அமைகிறது.

சுகாதார நிலை மோசமாகி வருவது தொடர்பாக கடந்த வாரம் சுகாதார அமைச்சர் பௌசியுடன் பேச்சு நடத்தினேன்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தற்காலிகமாகப் பணியாற்றுபவர்களை நிரந்தரமாகக் கடமையாற்ற அனுமதிக்கவும் —

வைத்திய உபகரணங்கள் அனுப்பவும் — நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி கூறியுள்ளார்.

(வளரும்)

# இவ்வாண்டு மின்வெட்டு அமுலில் இராது!

## மின்சார சபை அதிகாரி தகவல்

கொழும்பு, மார்ச் 11

நீரேந்து பகுதிகளில் போதுமான அளவு மழை இவ்வாண்டு பெய்யாவிடினும் இம்முறை மின்வெட்டு இருக்காது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மின்சாரசபை புதிதாக ஆரம்பித்துள்ள தேசிய மின் உற்பத்தி நிலையத்தால் இவ்வாண்டு ஜூலை முதலாம் திகதியிலிருந்து 155 கிலோ வாற்ஸ் மின்னை உற்பத்தி செய்ய முடியும் எனவும் —

எனவே மின் உற்பத்திக்கு இனிமேல் தனியே நீர்மின் உற்பத்தியில் மட்டும் தங்கியிருக்கத் தேவையில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

சுன்னாகம் எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக செல்லாச்சி அம்மையார் வீதி-கே. கே. எஸ் வீதிக்கு உட்பட்ட ஆறேமுக்கால் பரப்புக்காணி கிணற்றுடனும், கட்டடங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. ஸ்ரீ பாஸ்கரன், 7 ஆம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். (45695)

### தேவை

6 H.P. டீசல் இன்ஜின் [குபாட்டோ ஜன்மார்] தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல.564, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (45717)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் கல்லூரி அதிபர் திரு. சு. புண்ணியசீலன் தலைமையில் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலயம் - 2 பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. வி. இராசையா கலந்து கொள்கிறார்.

(ஐ-4)

## அ. அட்டைகளை ஒப்படைக்க வேண்டும்

வடமராட்சி, மார்ச் 11

வடமராட்சிக்குள் செல்பவர்களில் 35 வயதுக்குட்பட்டவர்கள் தங்கள் அடையாள அட்டைகளை வல்லைச் சந்தியிலுள்ள படைமுகாமில் ஒப்படைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்ட படையினர் அவர்கள் வடமராட்சிக்குள் நுழைவதற்கு விசேட அனுமதி அட்டை ஒன்றை வழங்குகின்றனர்.

வடமராட்சியிலிருந்து திரும்பி வரும்போது இந்த விசேட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்து தத்தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ஐ-173)

## பளையில் ஓய்வூதியக் கொடுப்பனவு

தென்மராட்சி, மார்ச் 11

பளைப் பிரதேச செயலக ஓய்வூதியர்களின் இம் மாத ஓய்வூதியம் இன்று செவ்வாய்க்கிழமை பளை கிராமிய வங்கியில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## மாதாந்த உதவிப்பண கொடுப்பனவு

தென்மராட்சி மார்ச் 11

தென்மராட்சிப் பிரதேச மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கான கொடுப்பனவுகள் நேற்று திங்கட்கிழமை முதல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் அடுத்த வாரம் அஞ்சலகங்களுக்கு அனுப்பிவைக்கப் படுமென வும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
சங்கப் பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு
பொதுக்கூட்டம்
12-03-1997

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 12-03-1997 புதன்கிழமை காலை 9-30 மணிக்கு சங்கத்தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (39, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்) நடைபெறவிருக்கின்றதென்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ந. பாலவிநாயகர்,
மாவட்ட செயலாளர்,
யா. மா. வெ. உ. ச.

(சி-271)



தென்மராட்சிக்குத் தென்றல்...
புதுவருட புதிய தெரிவுகள்
சுமங்கலி

16, நவீனசந்தை, சாவகச்சேரி.

குறைக்கப்பட்ட விலைகளில் உங்கள் தெரிவுகள்.
அவற்றில் சில

| | | சில்லறை விலை |
|---|---|---|
| பிரிண்டற் பட்டர் சில்க் | 1 மீ. | 130-00 |
| பிளெயின் பட்டர் சில்க் | 1 மீ. | 110-00 |
| ஜோஜோ பிரிண்டற் | 1 மீ. | 165-00 |
| ஜோஜோ பிளெயின் | 1 மீ. | 130-00 |
| சில்க் பொலியஸ்டர் | 1 மீ. | 50-00 |
| மாட்டின் சேர்ட் | No. 1 | 300-00 |
| றேக் சேர்ட் | No. 1 | 525-00 |
| யாண் சேர்ட் | No. 1 | 525-00 |
| இன்டர்கூலர் பிரின்ட் | | 180-00 |
| கிப்ஸ் வெள்ளைக்கோடு சாரம் | | 300-00 |

மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கல்யாணப் பட்டுப் புடைவைகள், பட்டுவேட்டிகள், சிறுவர், சிறுமியர்களுக்கான றெடிமேட் ஆடைகள்.

இவற்றிற்கு;
சுமங்கலி
நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/270)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மார்க்கண்டு நடராஜா

தோற்றம்: 08-02-1915

மறைவு: 21-02-1996

திதி: 11-03-1997

இருவழியுந் தூய நல்ல வழியில் வந்த
இவர்யாரோ வென்னிலருன் கனிந்த நட
ராஜனவர் மணிவாயால் இறைவன் நாமம்
உரைத்திடுவார் எமதருமை ஐயா தானே.

ஆண்டுத் திவசக் கிரியைகள் 11-03-97 செவ்வாய்க்கிழமை அன்னாரது கல்வியங்காடு இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திக் கிரியையிலும் கலந்து தென்புலத்தார் இன்னருள் வேண்டி, மதிய போசன உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விஜி அகம்
புலவனார் வீதி, கல்வியங்காடு. (45712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிகள், வர்த்தக நிலையங்களில்

# ரூ. 1000 கள்ள நோட்டு குறித்து மக்கள் விழிப்பு!

வலிகாமம்தெற்கு, மார்ச் 11

தொண்ணூறு இலட்சம் ரூபா பெறுமதியான போலி ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா பெறுமதியான நோட்டுக்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து மக்கள் காசு நோட்டுக்களை கைமாறிக் கொள்ளும் போது மிகுந்த கவனத்துடன் செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

கஷ்டமான இக்காலகட்டத்தில் தம்மிடம் அப்படியானதொரு நோட்டு சிக்கி விடக்கூடாதே என்பதில் அவர்கள் மிகுந்த அவதானமாக நடந்துகொள்கின்றனர்.

வியாபார நிலைங்களிலும் மற்றும், கொடுக்கல் வாங்களின் போதும் ஒவ்வொரு நோட்டையும் சந்தேகத்துடன் தூக்கிப் பார்த்து நல்ல நோட்டா என்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே அவற்றை பரிமாறிக் கொள்கின்றனர்.

சில இடங்களில் உள்ள சிறிய வியாபார நிலையங்களில் ஆயிரம், ஐநூறு ரூபா நோட்டுக்களை ஏற்காமல் சில்லறை நோட்டுக்களை கொண்டுவருமாறு மக்களை கேட்கின்றனர்.

வங்கிகளில் வழங்கப்படும் நோட்டுக்களில் கூட கள்ள நோட்டுக்கள் இருக்குமா எனச்சந்தேகித்து ஆராய்ந்த பின்னரே அவற்றை பெற்றுக் கொள்வதை காணமுடிகிறது.

(ஐ-152)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்: 30-07-1953

ஆண்டவன் மடியில்: 10-02-1997

இரத்தினசிங்கம் லோகேஸ்வரன்

திதி: 11-03-1997

தங்களின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் தங்களின் ஒளியின்றி வாடும்:

தகப்பன்: இரத்தினசிங்கம்,
தாய்: அன்னலச்சுமி,
மனைவி: மோகனாம்பிகை,
பிள்ளைகள்: தஷாஜினி, பிரதாஜினி, பாலஜிகரன், சிவாஜினி,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (45713)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 02 — 02 — 1923

உதிர்வு: 10 — 02 — 1997

அமரர் கனகசபை சதாசிவம்

(இளைப்பாறிய பிரதம கணக்காளர், பதிவாளர் திணைக்களம், கொழும்பு)

எங்கள் தந்தையினது வீட்டுக்கிருத்தியம் நாளை (12-03-1997) புதன்கிழமை மு. ப. 10-30 மணியளவில் நல்லூரில் உள்ள எமது வதிவிடத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை சிவபதம் அடைந்த போது எங்கள் குடும்பத்தவர்க்கு பல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

114/1, கோயில் வீதி,
நல்லூர். (45700)

நல்லூர் பிரதேச நூலகம்.

# உதயன்

## பல்லவியும் அனுபல்லவியும்

எல்லைகள் நிரந்தரமானவை அல்ல. சமுதாயங்கள் மாறும்போது அவற்றை மாற்றி அமைப்பது அவசியம்.

இவ்வாறு பல்லவி பாடியிருப்பவர் அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ்.

அவர் வெறும் பேராசிரியராக, கல்வித்துறையோடு நின்று, அரசியல் அங்கி அணியாமல், இதனைக் கூறியிருந்தால் இதன் சரிபிழை குறித்துச் சிந்திக்கலாம்.

தமிழர்களின் தாயகப் பூமி என்று கொள்ளப்படும் வடக்கு — கிழக்கைப் பிரித்துவிடும் நோக்குடன், இணைப்பை அரசு எதிர்க்கும் என்ற அனுபல்லவியுடன், எல்லைக் கருத்தை அவர் முன் வைத்திருப்பதால் இது குறித்து நோக்க வேண்டியதில்லை.

வடக்கு — கிழக்கு தமிழர்களின் மரபுவழித் தாயகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம். இலங்கையின் இரண்டு பிரதமர்களான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் டட்லிசேனநாயக்காவும் இதனை அங்கீகரித்துத் தான் தந்தை செல்வாவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். பண்டா — செல்வா ஒப்பந்தத்தைத் தாம்பதவிக்கு வந்ததும் நடைமுறைப்படுத்துவார் என இப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும், முன்னர் தந்தை செல்வாவுக்கு வாய்மொழி மூல உறுதி அளித்திருந்தார்.

1958 இலும் 1977 இலும் 1983 இலும் கொழும்பில் இனக் கலவரங்கள் மூண்ட வேளைகளில், அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை அவ்வப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் வடக்கு — கிழக்குக்குக் கப்பல்களிலும், ரயில்களிலும் அனுப்பிய போதும் —

வடக்கு — கிழக்கு தமிழர்களின் மரபு வழித்தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆகக் கடைசியாகச் செய்து கொள்ளப்பட்ட ஜே. ஆர் — ராஜீவ் ஒப்பந்தத்திலும் வடக்கு — கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது அங்கீகரிக்கப்பட்டு இரண்டு பிரதேசங்களும் ஒரே மாகாணமாக இணைக்கப்பட்டன.

இப்போதைய அரசு தனது அதிகாரப் பரவல் பொதியை உத்தியோகபூர்வமாக (1995 ஓகஸ்டில்) வெளியிட்ட போதுகூட —

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இப்போதுள்ள எல்லைகளை மீள வரைவதன் மூலமாக ஒரு பிராந்தியம் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதே அன்றி —

வடக்கு — கிழக்குப் பிரிக்கப்படும் என்று கூறப்படவில்லை,

அந்தத் தீர்வுப் பொதியின் சிருஷ்டிகர்த்தாவான பேராசிரியர் பீரிஸ் இப்போது வடக்கு — கிழக்கு இணைக்கப்படமாட்டாது, பிரிக்கப்படும்; என்று கூறுவது முற்றிலும் முரணானதாகும்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முக்கிய தேவைகளில் ஒன்றாக விளங்குவது வடக்கு — கிழக்குப் பிரிக்கப்படாமல் இருப்பது.

ஆனால் அரசு அதனைக் கவனத்தில் எடுக்காது, தனது போக்கில் முரணாக நடக்குமானால், தீர்வுப் பொதியை தமிழர்கள் மீது துப்பாக்கி முனையில் திணிக்க முயல்வதாகவே கொள்ளப்படும்.

# 'அன்ரனோவ்' விமான விபத்து; ரஷ்ய பொறியியலாளரே பொறுப்பு!

### விமானிக்குத் தெரியாமல் செயலாற்றினார்

கொழும்பு, மார்ச் 12

இரத்மலானை விமான நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற 'அன்ரனோவ்' விமான விபத்துக்கு அந்த விமானத்தில் பொறியியலாளராகப் பணியாற்றிய ரஷ்யரின் செயலே காரணம் என தற்போது தெரியவருவதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

வழமையாக விமானம் ஓடு பாதையில் ஓடி, நிலத்தை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக எழுந்து சாதாரணமாகப் பறக்கும் நிலைக்கு வந்த பின்னரே விமானத்தின் சக்கரங்கள் உள்ளிழுக்கப்பட வேண்டும்.

ஆனால் சம்பவதினம் விமானம் நிலத்தைவிட்டு கிளம்பத் தொடங்கியதுமே விமானிக்கு அறிவிக்காமல் விமானச் சக்கரங்களை சம்பந்தப்பட்ட பொறியியலாளர் உள்ளே இழுக்கச்செய்து விட்டாராம்.

விமானம் வானத்தில் எழும்பத் தொடங்கியதும் திடீரென விமானத்தில் பெரும் சத்தம் ஒன்று கேட்டது. கலவரமடைந்த இலங்கையரான விமானி, விமானத்தை உடனே தரையிறக்க முடிவு செய்தார்.

விமானம் நன்கு பறக்கத் தொடங்கிய பின்னரே விமானச் சக்கரங்கள் உள்ளே இழுக்கப்படுவது வழமை என்பதால் அவ்வேளை சக்கரங்கள் உள்ளே இழுக்கப்பட்டிருக்கமாட்டா என விமானி கருதியதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் விமானச் சக்கரத்தை உள்ளே இழுப்பது பற்றிய முன்னறிவிப்பு தனக்கு வழங்கப்பட்டிராததாலும் —

ஆங்கிலத்திலோ, சிங்களத்திலோ புலமையில்லாத ரஷ்ய பொறியியலாளருடன் சக்கரம் பற்றி உரையாட முடியாமல் மொழிப் பிரச்சினை இருந்ததாலும் —

பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளாமலேயே விமானத்தை அவசர அவசரமாக உடனே தரையிறக்க முயன்றார் விமானி.

அத்துடன் —

விமானத்திலிருந்து கிளம்பிய சத்தத்தால் கலவரமடைந்த விமானிக்கு முடிவு எடுத்து செயற்படுத்த இரண்டொரு வினாடி கால அவகாசமே இருந்ததாம்.

இதனால் அவசரப்பட்டு அவர் விமானத்தைத் தரையிறக்கினார். சக்கரம் வெளியே இல்லாத நிலையில் —பெரும் வேகத்துடன் நிலத்துக்குச் சற்று உயரத்தில் பறந்து கொண்டிருந்த — விமானம் திடீரெனத் தரையிறக்கப்பட்டதால் அதன் வயிற்றுப் பகுதி நிலத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(உ-3-150)

## வெளிநாட்டு

# விமானிகளைப் பணிக்கு அமர்த்தியதிலும் குளறுபடி!

வடக்கு— கிழக்கு போர் முனையில் பணியில் ஈடுபடும் விமானங்களில் ஆறுக்கு மேற்பட்ட வெளிநாட்டு விமானிகள் சேவையாற்றுகின்றனர். அவர்களைப் பணிக்கு அமர்த்துவதில் குளறுபடி இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது என கொழும்புப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கை விமானிகளை விட இவர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகின்றது. அதுவும் அமெரிக்க டொலர்களிலேயே வழங்கப்படுகின்றது.

முன்னைய சோவியத் குடியரசு நாடுகளில் இருந்து ஆயிரம் அமெரிக்க டொலர் மாதாந்த சம்பளத்துக்கு விமான ஓட்டிகளைப் பெறக் கூடியதாக இருந்தது.

ஆனால் இந்த 6 விமான ஓட்டிகளுக்கு அதை விடப் பலமடங்கு சம்பளம் வழங்கப்படுகிறதாம்.

ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள முகவர் ஒருவரே இந்த விமான ஓட்டிகளை இலங்கை விமானப்படைக்குப் பணிக்கு அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்தார் என அறியவருகின்றது.(உ-3-150)

## புதிதாக நியமனம் பெறும்

# நெசவு போதனாசிரியர் 34 பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

அமைய நெசவு போதனாசிரியர்களாக வடக்கு கிழக்கு மாகாண கைத்தொழில் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ள 31 பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை யாழ். செயலகத்தில் சமுகமளித்து கைத்தொழில் பணிப்பாளர் ம. செ. இரேனிஸிடம் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

தெரிவானோரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ மகாதேவன் ஜெயா —புத்தூர் மேற்கு.

★ ஏரம்பமூர்த்தி இரத்தினம் — கோண்டாவில் கிழக்கு.

★ இராஜதுரை திலகம் — மட்டுவில் கிழக்கு.

★ கந்தையா மங்கையர் திலகம் — மூளாய் கிழக்கு.

★ சிவனேஸ்வரி சண்முகலிங்கம் — திருநெல்வேலி கிழக்கு.

★ கந்தசாமி ரமணசுதன் — கோண்டாவில் கிழக்கு.

★ ஜெகநாதன் பரமராணி — கொக்குவில் கிழக்கு.

★ கோவிந்தராஜ் சிவயோகம் — சூராவத்தை, சுன்னாகம்.

★ விக்னேஸ்வரன் பாலதேவி — கோப்பாய் தெற்கு.

★ நவரத்தினசாமி புனிதவதி — நல்லூர் வடக்கு.

★ பொன்னையா லீலாவதி — சரசாலை தெற்கு.

★ சின்னத்துரை கமலாதேவி — கோப்பாய் தெற்கு.

★ செல்லையா அருந்ததி தேவி — ஒட்டுவெளி, மிருசுவில்.

★ கதிர்காமநாதன் புவனேஸ்வரி — தோப்பு அச்சுவேலி.

★ யோகேஸ்வரி விஸ்வலிங்கம் — கோண்டாவில் கிழக்கு.

★ ஆறுமுகம் தனலட்சுமி — சிறுப்பிட்டி கிழக்கு.

★ வைத்திலிங்கம் திருமதி தேவி — சிறுப்பிட்டி தெற்கு.

★ சரோஜினிதேவி சின்னத்தம்பி — கோப்பாய் தெற்கு.

★ நடராஜா இரத்தினம்மா — கோண்டாவில் மேற்கு.

★ சோமசுந்தரம் திருமணி — யாழ்ப்பாணம்.

★ கணபதிப்பிள்ளை மாவலிவாணி — ஆனைக் கோட்டை.

★ சிவகுருநாதன் பாய்க்கியலட்சுமி — மிருசுவில்.

★ மனோகரன் கலாவதி — சங்கானை வடக்கு.

★ தில்லையம்பலம் யோகேஸ்வரன் — திருநெல்வேலி.

★ கருணாகரன் கலாநிதி — துன்னாலை தெற்கு.

★ தாதாபிள்ளை உதயரத்தினம் — அரியாலை மேற்கு.

★ சீவரத்தினம் ரேவதி — திருநெல்வேலி கிழக்கு.

★ தர்மராசா செல்வநாயகமலர் — மட்டுவில் தெற்கு.

★ அனுசியா தம்பிராசா — நல்லூர் வடக்கு.

★ சோதிப்பிள்ளை கந்தசாமி — மறவன்புலோ மேற்கு.

★ ஸ்ரீமகாதேவன் அழகம்மா — திருநெல்வேலி.

(ஐ)

## நாளை

**மாசி 29**

**புதன்கிழமை**

**திதி:** சதுர்த்தி பின்இரவு 12-14 வரை.

**நட்சத்திரம்:** அச்சுவினி முன்இரவு 6.44 வரை.

சதுர்த்தி விரதம்

**சுபநேரம்:** 4.53-6.23

**ராகுகாலம்:** 12.23-1.53

(பகலுக்கும் இரவுக்கும் [illegible])

## கண்காட்சி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி கனிஷ்ட பிரிவு மாணவர்களின் கைவினைப் பொருள்களின் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்குக் கல்லூரியில் நடைபெறும். ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி ஆர். இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்வர். (ஐ)

## மெய்வல்லுநர் போட்டிகள்

நாவாந்துறை றோ.க. வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திரு. யே. யேசுதாசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு ம. றெஜி ராஜேஸ்வரன் கலந்து கொள்வார். [ஐ-30-51]

★ ★ ★

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.30 மணி முதல் அதிபர் திரு பொ. நடராசா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன் கலந்து கொள்வார். (ஐ-30-51)

## 'இன்ரநெட்' மூலம் தேர்தல் முடிவு

இலங்கையில் முதன் முறையாக உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகள் "இன்ரநெட்" மூலம் வெளியிடப்படவுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ. சி. பி. சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை தேர்தல் திணைக்களம் தகவல் திணைக்களத்திற்கு வழங்கும் என்றும் அதன் மூலம் தொடர்பு சாதன நிறுவனங்களுக்கு தேர்தல் முடிவுகள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வாசகர் திருமுகம்

# வலி- வடக்கு மக்களுக்கு விசேட அடையாள அட்டை

வலி, வடக்கில் நிரந்தரமாக வசித்த மக்கள் இடம் பெயர்ந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. இவர்களில் பலர் தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் கூட வாழ்ந்து வருவது தெரிந்ததே. குறிப்பாக பலாலி, மயிலிட்டி, தையிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான், காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி போன்ற இன்னும் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள், சொந்த ஊர், வீடுவாசல், தொழில் இழந்து அல்லற்பட்டும், துன்பப்பட்டும், மனநிம்மதியின்றி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு பிற இடங்களில் வாழ்கின்றார்கள்.

"பாவியார் போகும் இடம் பள்ளமும் திட்டியும் என்னும் முதுமொழிக்கு இணங்க விசேட அட்டையைப் பெற நாம் தற்போது வசிக்கும் கிராமசேவகரை அணுகிய போது எங்கள் சொந்த ஊர் கிராமசேவகரிடம் போய்ப் பெறுமாறு அவர் கூறுகிறார்.

நாம் எவ்வாறு சொந்த ஊர் செல்வது? அதாவது வலி – வடக்கின் தலைமைக் காரியாலயம் தற்போது மல்லாகத்தில் இயங்குகின்றது என அறிகின்றோம். தென்மராட்சியிலும், வடமராட்சியிலும், பல இடங்களிலும் பரந்து வாழும் வலி வடக்கு மக்கள் அங்கு சென்று வருவதென்றால் பல கஷ்டங்களையும், சிரமங்களையும் மட்டுமன்றி பல சோதனைச் சாவடிகளையும் எதிர்நோக்க வேண்டி இருக்கிறது.

உதயனில் (12 - 2 - 97 இல்) வெளியாகிய செய்தியின் பிரகாரம் விசேட அடையாள அட்டை வழங்கும் பணி ஏப்ரல் 30 ஆந் திகதியுடன் நிறைவு பெறுகின்றது என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். எம்போன்ற மக்கள் படும் இன்னல்களைக் கருத்தில் கொண்டு தற்பொழுது அவரவர் வாழும் பகுதி கிராம சேவகர் ஊடாக விசேட அடையாள அட்டைகளைப் பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், யாழ். அரச அதிபரும் ஆவன செய்வார்களா?

இடம் பெயர்ந்து விசேட அடையாள அட்டை பெற முடியாது இன்னலுறும் மக்களில் நானும் ஒருவன்.

செ. பிரபு.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண் நள்ளிரவில் கூட்டிச் செல்லப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பத்து மணி அளவில் சோதனை நடத்தப் போவதாகக் கூறி வீடு ஒன்றுக்குள் புகுந்த — சீருடை தரித்த— நபர்கள் அங்கிருந்த அழகிய இளம் பெண் ஒருவரைப் பலவந்தமாகக் கூட்டிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இணுவில் பகுதியில்—காங்கேசன்துறை வீதியில்— மேற்படி 18 வயதுடைய இளம் பெண் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து வந்து கொழும்பில் தங்கியிருந்த தந்தையாரைப் பார்ப்பதற்குத் தாயார் கொழும்பு சென்றதை அடுத்து, இந்த இளம் பெண், அருகில் துரைவீதியில் உள்ள தனது மாமனார் வீட்டில் இரவில் தங்கியிருந்தாராம்.

இரவு வேளை சீருடையில் வந்தோர் வீட்டுக்குள் சென்று அந்த இளம் பெண்ணை விசாரணைக்குக் கூட்டிச்செல்ல முயன்றனர்.

அதனையடுத்து அப்பகுதி மக்களும், அந்த வீட்டிலிருந்த ஏனைய குடும்பத்தவர்களும் கத்திக் குளறிக் கூக்குரலிட்டனர். சீருடையில் வந்தோர் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்த பின்னர் அந்த இளம் பெண்ணைக் கூட்டிச் சென்றதாகக் கூறப்பட்டது.

இதன் பின்னர் நேற்றுக் காலை, சம்பவம் நடந்த இடத்திலிருந்து முந்நூறு யார் தூரத்துக்கு அப்பால் நிலைகொண்டிருந்த படையினரிடம் சென்று அந்த இளம் பெண்ணின் உறவினர்கள், இளம் பெண்ணைப் பற்றி விசாரித்த போது, தமக்கு எதுவும் தெரியாது என்று பதிலளிக்கப்பட்டதாம்.

இந்த விடயம் குறித்து யாழ். நகரில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது. தற்போது யாழ். நகரில் தங்கியுள்ள ஈ. பி. டி. பி யின் எம். பிக்களும் இது விடயத்தில் அதிக சிரத்தை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் பலகல்லேயுடன் எம். பிக்கள் தொடர்பு கொண்டிருப்பதாக அறிய வந்தது. (உ-3)

## பூநகரியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இராணுவத்தினர் அவர்களைப் பொறுப்பேற்றனர். நேற்றுப் பிற்பகல் வரை குருநகர் கடற்கரையோரத்தில் உள்ள வீட்டுப் பகுதி ஒன்றில் அவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

யாழ். பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசா, யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினர், குருநகர் பங்குத் தந்தை ஆகியோர் இந்த 205 பேரின் நலன்களைக் கவனித்தனர். குருநகர்ப் பகுதி கிராம சேவையாளர்கள் இந்த அகதிகளின் பெயர், விவரங்களைப் பதிவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.


உ

சுன்னாகம்

அருள்மிகு ஐயனார் தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவம் - 1997

மஹோற்சவ பிரதமகுரு

சோ. வாகீஸ்வரக்குருக்கள்

(ஊரெழு கிளானைப்பதி ஸ்ரீபர்வதவர்த்தினி அம்பாள் ஆலய பிரதமகுரு)

பூசகர்கள்:

சி. ஐ. கந்தசாமி, பெ. வாமதேவன்

13 - 03 - 97 வியாழன் கொடியேற்றம்
18 - 03 - 97 செவ்வாய் வசந்தோற்சவம்
20 - 03 - 97 வியாழன் வேட்டைத்திருவிழா
22 - 03 - 97 சனி தேர்த்திருவிழா
23 - 03 - 97 ஞாயிறு தீர்த்தோற்சவம்
30 - 03 - 97 ஞாயிறு காலை பொங்கல்

பகல் திருவிழா காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 11.30 மணிக்கு நிறைவு பெறும். மாலைத் திருவிழாக்கள் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.00 மணிக்கு முடிவடையும். விழாக்கள் யாவும் உள் வீதியிலேயே நடைபெறும்.

சி. செ. நடராசா — செயலாளர்
த. ஸ்ரீவரதலிங்கம் — தனாதிகாரி
சி. குமரவேல் — தலைவர்

நிர்வாக சபை,
ஐயனார் தேவஸ்தானம்,
சுன்னாகம். 10-03-1997 (45780)



உ

இணுவில்

திருவருள் மிகு

சிவகாமி அம்மன் கோயில்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

12-3-1997 புதன்கிழமை காலை 10 மணி அளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்)
17-3-1997 திங்கட்கிழமை மஞ்சம்
19-3-1997 புதன்கிழமை கைலாசவாகனம்
20-3-1997 வியாழக்கிழமை குதிரை வாகனம்
21-3 1997 வெள்ளிக்கிழமை சப்பரம்
22-3-1997 சனிக்கிழமை இரதோற்சவம் (காலை 7 மணி— வசந்த மண்டப பூஜை)
23-3-1997 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் (காலை 8 மணி— வசந்த மண்டப பூஜை)

மஹோற்சவ பிரதம குரு:

"வேத சிவாகம கிரியாரத்தினம்"

சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்

மு. சிவலிங்கம்
தர்மகர்த்தா

இணுவில். (9373)


## கிரனேட்....

(முதலாம் பக்கத் தொடர்)

பூசை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் இடம்பெற்ற இச் சம்பவத்தால் ஆலயத்தில் கூடிநின்ற மக்கள் சிதறி ஓடினர் எனவும் —

ஓடியவர்களில் ஒருவரே காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## பெண்....

(முதலாம் பக்கத் தொடர்)

பற்றிய விசாரணையை குற்றத்தடுப்புப் பொலீசாரிடம் கையளிக்கவேண்டும் எனவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன பொலீஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார். (ஐ-10)

## மு. காங்கிரஸுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் தமது இணக்க நிலை குறித்து ஐ. தே. க. பிரமுகர்களிடம் விளக்கினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கம் தொடர்பான ஏற்பாடுகள் வருமாறு:

★ பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக தென்கிழக்கு மாகாண சபையை உருவாக்குதல்.

★ வடக்கு — கிழக்கு மாகாண சபை மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

★ அம்பாறையை இவ்விரு மாகாண சபைகளுடனும் இணைக்காமல் வேறு ஒரு மாகாணசபையுடன் இணைத்தல்.

★ தென்- கிழக்கு மாகாண சபையில் 57 வீதம் முஸ்லிம்களும், 28 வீதம் தமிழர்களும் 15 வீதம் சிங்களவர்களும் இருப்பர்.

— இந்த இணக்கப்பாட்டு நிலையை அரசாங்கமும் ஏற்பதாக நம்பகமாக அறியவருகிறது —

இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## இரு பிரதான...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்த தினத்திலிருந்து நேற்று வரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக சுமார் ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் வன்முறைகள் தொடர்பான அவதானிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இவற்றில் 75 வீதமான முறைப்பாடுகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஐ. தே. கட்சி ஆகியனவற்றிற்கு எதிரானவை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்கி அழித்தனர்.

விமானங்களை நிறுத்தி வைத்திருப்பது தொடர்பான உத்தரவு புறக்கணிக்கப்பட்டது ஏன்? — என்பது குறித்தும் —

சீனக்குடா விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் மோட்டார், ஆட்டிலறித் தாக்குதல் நடத்தும் ஆபத்து உண்டு என்று நன்கு தெரிந்திருந்தும் விமான ஓடு பாதையில் 'வை -12' ரக விமானம் நிறுத்தி வைக்கப்பட்டது ஏன் என்பது குறித்தும் —

பாதுகாப்பு வட்டாரங்களில் தற்போது கேள்வி எழுந்திருக்கின்றது.

ஓடு பாதையில் 'வை - 12' விமானம் நிறுத்தி வைக்கப்பட்டதன் மர்மம் குறித்து விசாரணை நடத்த விசாரணைக்குழு ஒன்றை விமானப் படை நியமித்துள்ளது.

கடந்த 95 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதியின் பின்னர் 12 வானூர்திகளை விமானப்படை இழந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-150)

## வன்னிக்கு 38 ...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 202 பேருக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஒரு நேரச் சாப்பாட்டுக்கே வழியற்றவர்களாக இவர்கள் தற்போது நிவாரணம் கோரி கொளுத்தும் வெயிலில் ப. நோ. கூ. சங்கங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் அலைந்து திரிகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 ஆயிரத்து 854 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 367 பேருக்குக் கடந்த பெப்ரவரி மாதம் வரை மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

அங்கும் இம் மாதம் முதல் அந்த விநியோகத்தைத் தொடர முடியாத அபாய நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும் நிவாரண உணவுப் பொருள்களை வவுனியாவில் இருந்து 285 லொறிகள் மூலம் எடுத்து வர கடந்த ஜனவரியில் திட்டமிடப்பட்டது என்றும் —

ஆனால் திட்டமிட்டவாறு இல்லாமல் 185 லொறிகள் மட்டுமே உணவுப் பொருள்களுடன் அனுமதிக்கப்பட்டு வந்து சேர்ந்ததாகவும் —

முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ப. நோ. கூ. சங்கங்களின் லொறிகள் மூலம் வன்னிப் பகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வன்னிக்கான உணவு விநியோக இணைப்பதிகாரியான வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

(கிளிநொச்சி மாவட்ட நிலைவரம் குறித்து அரச அதிபர் எஸ். தில்லைநடராஜா உதயனுக்கு அளித்த பேட்டி 5 ஆம் பக்கத்தில்)

## 8 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

தாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி நாச்சிக்குடாவில் இருந்து தமிழகம் நோக்கிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 130 தமிழர்கள் பலியான சம்பவத்துக்கும் இந்த மீனவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும் —

கடலில் கவிழ்ந்த அந்தப் படகை இவர்களே ஓட்டிச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் மது போதையில் இருந்ததாலேயே அந்த விபத்து ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவர்கள் எட்டுப் பேரையும் விசாரணை செய்த பின்னர் மீண்டும் தமிழகம் செல்ல புலிகள் அனுமதித்தனர் என்றும் —

நாச்சிக்குடாவில் இருந்து தமிழகம் நோக்கிப் புறப்பட்ட இவர்களைக் கடலில் வைத்து கடற்படையினர் பின்னர் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை விஜபராசா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி குடியேற்றத் திட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லூர் ப. நோ. கூ. சங்க முன்னாள் கிளை முகாமையாளர் சங்கரப்பிள்ளை விஜபராசா காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் (நல்லூர், ப. நோ. கூ. சங்கம்) அன்புக் கணவரும், சாந்தகுமார், சஜிந்தினி, றஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, மதியாபரணம் ஆகியோரின் மருமகனும், குகதாஸ், பத்மாவதி, சாளினி ஆகியோரின் மாமனாரும், தர்மினி, தர்சினி, தர்மசீலன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11-03-1997 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வி. கமலாம்பிகை
(மனைவி)

161, கிராமவிஸ்தரிப்புத் திட்டம்,
திருநெல்வேலி.
(45731)

## சுப்பையாக் குருக்கள் வேதாரணியக் குருக்கள்

(பிரதமகுரு, வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோயில்)

தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையாக் குருக்கள் வேதாரணியக் குருக்கள் நேற்று 10 - 03 - 1997 காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுப்பையாக் குருக்கள்- மாணிக்கம்மா தம்பதிகளின் மகனும், நீலாயதாட்சியம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரக் குருக்கள், விசாலாட்சியம்மா (திருமலை), முத்துச்சாமிக்குருக்கள் (ஆலடிப் பிள்ளையார் கோயில், திருமலை), சிவபாக்கியம், காலஞ்சென்ற ஞானாம்பிகை (திருமலை), தங்கம்மா (கட்டுவன்), சிவக்கொழுந்து (குரும்பசிட்டி), வைத்திலிங்கம் (தியாகர்) திருஞானசம்பந்தர் (திருமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஞ்சிதமலர் (இருபாலை), ஜெயராணி (கலட்டி), பாலச்சந்திரக்குருக்கள், பாலசுப்பிரமணியம், முத்துச்சாமி, ராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுவாமிநாதக் குருக்கள் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் ஐயா (பரிசோதகர், இ. போ. ச.), குமாரசாமிஐயா ஆகியோரின் மைத்துனரும், தி. வைத்தீஸ்வரன் (இருபாலை), து. விவேகானந்தக் குருக்கள் (பிரதமகுரு, பிள்ளையார் கோயில், கலட்டி), மலர் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (11-3-97) அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. வைத்தீஸ்வரன்
(மருமகன்)

வல்வெட்டி,
வேவில்,
வல்வெட்டித்துறை.
(/சி277)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 361இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org